**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்</u>**

முன்னிலை : **திருமதி. D.ஜான்சி ராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 09–ஆம் நாள், புதன்கிழமை

**<u>இ.ம.எண். 03/2024 இன் அ.வ.எண்.202/2014</u>**

**<u>CNR No. TNSA13-000127-2014</u>**

1. மணிவேல்
2. ராமலிங்கம்
3. ஜோதி
4. சின்னபொண்ணு
5. வள்ளி
6. வசந்தா . . . மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

/எதிராக/

மணி . . . எதிர்மனுதாரர் /வாதி

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 07.04.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. L.தயாளன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.R.ஆறுமுகம் மற்றும் திரு.S.செந்தில்முருகன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர், கடந்த 05.09.2013ம் தேதியில் ஏற்பட்ட பாகபாத்திய விடுதலை பத்திரத்தின் அசலை இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து, அசல் ஆவணத்தை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>**

எதிர்மனுதாரர்/வாதி இந்த தாவாவை மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் இந்த தாவாவில் பதிலுரை தாக்கல் செய்யும் போது மனுதாரர் கடந்த 05.09.2013 ல் 2 முதல் 6 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த பாகபாத்திய விடுதலை பத்திரத்தின் அசலை ஒப்புவிக்க தவறிவிட்டதாகவும், தற்போது அந்த பத்திரத்தின் பதிவு நகல் என்று ஒரு ஆவணத்தை எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ளார் என்றும், அந்த பதிவு நகலில் கண்டுள்ள சர்வே எண் அசல் பத்திரத்தில் கண்டுள்ள சர்வே எண்ணிலிருந்து மாறுபடுகிறது என்றும், ஆகவே மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வாதத்தை நிரூபிக்கும் வகையில் 05.09.2013 ம் தேதியில் ஏற்பட்ட பாகபாத்திய விடுதலை பத்திரத்தின் அசலை நீதிமன்றத்தில் ஒப்புவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும், அவ்வாறு ஒப்புவிப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு ஆவணமாக ஏற்று கொள்ள வேண்டும் என்றும், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை எதிர்மனுதாரர் மறுக்கிறார். எதிர்மனுதாரர்/வாதி 05.09.2013 ம் தேதியிட்ட பாக பாத்திய விடுதலை பத்திரத்தின் சான்றிட்ட நகலை இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ள சான்றிட்ட நகலில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் தாவா சொத்துக்கு சம்மந்தப்படாத புதிய நத்தம் சர்வே எண்.671/17 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போது மனுதாரர் வழக்கிற்கு ஏற்றார்போல் அசல் பாக பாத்திய விடுதலை பத்திரத்தில் உள்ள சர்வே எண்ணை திருத்தம் செய்து காலம் கடந்து ஒப்படைத்திருப்பது சட்டப்படி ஏற்கக்கூடியதல்ல என்றும், எதிர்மனுதாரர் வழக்கு

தாக்கல் செய்த பொழுதே தாவா பிராதுடன் 05.09.2013ம் தேதியிட்ட பாக பாத்திய விடுதலை பத்திரத்தின் சான்றிட்ட நகலை ஒப்படைத்து 10 வருடங்கள் வரை அசல் ஆவணத்தை ஒப்படைக்க முன்வராமல் சர்வே எண்ணை திருத்தி காலம் கடந்து ஒப்படைத்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், தவறாக திருத்தப்பட்ட ஆவணத்தை அசல் ஆவணமாக ஏற்று குறியீடு செய்ய கூடாது என்று எதிர்மனுதாரர் ஆட்சேபனையை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மனுவில் தாக்கல் செய்ய கோரியுள்ள ஆவணமானது தாவா சொத்து தொடர்பான ஆவணம் என்பதாலும், மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் வழக்கினை நிரூபிக்க அவசியமான ஆவணம் என்பதாலும், மேற்படி பாகபாத்திய விடுதலை ஆவணத்தின் அசலை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கோரியவாறு அவர்கள் தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாகும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. தீர்வு

இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 09–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.04.09 18:24:28 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

மனுதாரர்கள்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2025.04.09 18:24:44 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**<u>சா.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம. எண். 03/2024 இன்
அ.வ. எண். 202/2014
நாள் : 09.04.2025